பக்கங்கள்:-20

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 08 | திங்கட்கிழமை | 22.01.2024 | அதிர்வு 174 |
|---|---|---|---|---|---|

## எம் மக்களின் விடுதலைக்காக ஒன்றிணைந்து பயணிப்போம்

### தமிழரசின் புதிய தலைவர் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



"நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து, தேசியத்தோடு 06



# மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தி பயணத்தை ஆரம்பித்தார் சிறீதரன்

## கிளிநொச்சியில் அவருக்கு அமோக வரவேற்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று மாலை கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தினார்.

இதன்போது மாவீரர்களின் நினைவுத் தூபிக்கு அவர் கார்த்திகை மலர் வைத்து பூஜித்ததுடன், அஞ்சலியும் செலுத்தினார். 07

## திருமலையில் யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழப்பு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா-வான் எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செம்பி மொட்டை காட்டுப் பகுதியில் யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வயோதிபர் செம்பி மொட்டையில் அரசுக்குச் சொந்தமான காட்டுப் பகுதியில் நேற்று மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது 06



சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டும், சிறீதரனை வெல்ல வைக்க வேண்டும் என்பதற்காக வெளிநாட்டில் இருந்தும், கட்சிக்கு வெளியில் இருந்தும்துடியாய்துடித்த தரப்புக்கள் பலவும் சிறீதரன் மட்டுமே தேசியத்தைக் காப்பார், சுமந்திரன் தேசியத்தின் விரோதி என்று நீட்டுப் பட்டோலை பாடி அதில் வெற்றியும் கண்டிருக்கின்றனர். அந்த வெற்றிக்குக் கை மேல் பலனும் கிடைத்திருக்கின்றது. 06

# பொருளாதார மறுசீரமைப்புக்களின் பலன்கள் மக்களுக்குக் கிடைக்கும்

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு



**“எதிர்கட்சிகள் எந்த வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்களின் பலன்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்கும்.”**

**- இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**

கொழும்பு தாமரை தடாக கலையரங்கத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாட்டின் முன்னேற்றத்திற்கு சட்டதையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதேபோல் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழலையும் உருவாக்க வேண்டும். எதிர்கால சந்ததியின் பாதுகாப்பிற்கும் சட்டமும் சமாதானமும் வலுவூட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சட்டம், சமாதானம் தொடர்பிலான வெளிப்படைத் தன்மை காணப்படுகிறது. அதற்கு அவசியமான மூலதனம், மனித வளம், தொழில்நுட்பம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. நாம் அதே நிலைக்குச் செல்ல வேண்டும்.

பொருளாதாரம் சரிவடைந்து கிடந்த நிலையிலேயே நாம் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம். இரு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை பலரும் மறந்துவிட்டனர். நாட்டுக்குள் எரிபொருள் வரிசை காணப்பட்டது. எரிவாயுவுக்கு வரிசை காணப்பட்டது. மருந்து பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவியது.

ஆனால் இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் இருந்தாலும் அடுத்த நாளை எவ்வாறு கடத்துவது என்ற கேள்விக்குறியான நிலைமை இல்லாமல் போயுள்ளது.

தற்போது நிலைப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்திருக்கிறது. அதற்கமைய முதல் இரு வருடங்களும் நாட்டின்பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்காக செலவிடப்பட்டது. நாட்டு மக்களும் அதற்கு பெருமளவில் பங்களிப்பு செய்தனர். அந்தப் பயணத்தின் அடுத்த கட்டத்தையும் கவனமாகவே தொடர வேண்டும். நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளோம். சரிவடைந்த விவசாயத்துறையை மீளக் கட்டியெழுப்பும் வகையில் உரக் கொள்கைளை மாற்றியுள்ளோம்.

இவ்வாறான பல்வேறு பொருளாதார மறுசீரமைப்புக்களை நாட்டுக்குள் முன்னெடுத்துள்ளோம். அன்று 5 சதவீதமாக இருந்த நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை 16 சதவீதமாக அதிகரிக்கும் இயலுமை கிட்டியுள்ளது.” – என்றார்.









# காரைதீவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 300 வறிய குடும்பங்களுக்கு நிவாரணம்

காரைதீவு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள தெரிவு செய்யப்பட்ட 300 பயனாளி குடும்பங்களுக்கு புளொட் அமைப்பால் நிவாரணப் பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ப. ரவிச்சந்திரனின் (சங்கரி) தலைமையில் காரைதீவை சேர்ந்த புளொட் செயற்பாட்டாளர்கள் நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தார்கள்.

அமைப்பின் ஜேர்மன் கிளையை சேர்ந்த தோழர்கள் இவ்வேலை திட்டத்துக்கான நிதிப் பங்களிப்பை மேற்கொண்டிருந்தனர். பயனாளிகள் தெரிவு நீதியும், நேர்மையுமான முறையில் இடம்பெற்று உள்ளது, எமது மக்களின் துன்பத்தில் பங்கெடுப்பவர்களாக நாம் எப்பொழுது உள்ளோம் என்று ஊடகங்களுக்கு ரவிச்சந்திரன் தெரிவித்தார்.










# தமிழ்க் கிறிஸ்தவக் கலை உலகங்கள் பல்கலையில் சர்வதேச கருத்தரங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத் துறையும் தென்னிந்தியா – தமிழ்நாடு பாளையங்கோட்டைத் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் நாட்டார் வழக் காற்றியல் துறை மற்றும் ஆய்வு மையமும் இணைந்து 'தமிழ்க் கிறித்தவக் கலை உலகங்கள்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கினை ஜனவரி மாதம் 29 முதல் 31 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தத் திட்டமிட்டுள் ளன.

இது தொடர்பாகக் கருத்தரங்கு ஒழுங்கமைப்பாளர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது :-

தமிழ்ப் பண்பாட்டிற்குக் கிறிஸ்தவக் கலைகளின் பங் களிப்பும் கிறிஸ்தவத்திற்கு தமிழ் கலைவடிவங்களின் பங் களிப்பும் தமிழ்ப்பண்பாட்டின் பன்மைப் பரிமாணங்களைப் புரிந்து கொள்ளவதில் முக்கியமானவை. அந்த வகையில், நுண்கலைத்துறையின் ஐந்தாவது கருத்தரங்கானது இதுவரை அதிகம் பேசப்படாத இவ்விடயத்தில் கவனமெடுக்கிறது. காலனிய காலகட்டத்திற்கு முன்பிருந்தே பாக்கு நீரிணை யின் இருபக்கமும் நடைபெற்று வந்த கலைச் செயற்பாடு சார்ந்த ஊடாட்டங்கள் கிறித்தவத்தின் தாக்கத்தினால் புதிய பரிமாணங்களை அடைந்தன.

தென்னிந்தியா – இலங்கை ஆகிய இருபகுதிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் இப்பண்பாட்டுப் பரிமாற்றங்கள் – எடுத்துக்காட்டாக சிற்பம், ஓவியம், கட்டடம், இசை, நாடகம் போன்ற செயற்பாடுகள் – முறையான ஆய்வுக் கவனத் தைப் பெறவில்லை. இப்பின்னணியில், பாக்கு நீரிணையின் இருபக்கமுமுள்ள தமிழ்ச் சமூகங்களில் கிறித்தவ சமயம் சார்ந்த ஊடாட்டங்களின் மூலம் கலைச் செயற்பாடுகளில் நிகழ்ந்த பரிமாற்றங்களை – பரிமாணங்களை – ஆய்வுக் குட்படுத்தும் நோக்கில் இக்கருத்தரங்கம் ஒழுங்குபடுத்தப் படுகின்றது.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நிகழும் அங்குரார்ப்பண நிகழ்வில் அருட்தந்தை ஜெயசீலன் "தமிழ் கிறித்தவக் கலைகள்" என்ற தலைப் பிலும், மொரட்டுவை பல்கலைக்கழக விரிவுரையாள ரும் கட்டடக்கலைஞருமான சாகர ஜெயசிங்க "வட இலங் கையின் 19ஆம் நூற்றாண்டுக் கட்டடக் கலையையும் கலை யையும் ஆராய்தல்" என்ற தலைப்பிலும் திறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வின் இறுதியில் கேரோளவில் தமிழ்மொழி யில் ஆற்றப்படும் கத்தோலிக்க ஆற்றுகை வடிவம் பற்றிய ஆவணப்படமும் திரையிடப்படுகிறது.

இந்த நிகழ்விற்கு முன்னராக, அதே தினம் மாலை 3.00 மணிக்கு "பண்பாட்டு ஒட்டு" என்ற தலைப்பிலமைந்த வட இலங்கைத் தேவாலயங்கள் பற்றிய ஒரு காட்சியும் நுண் கலைத்துறையின் கலைக்கூடத்தில் திறந்து வைக்கப் படவுள்ளது.

தொடர்ந்து, 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் எட்டு அமர்வுகளில் ஆய்வுக்கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன.




கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிகளிலும், பிற அமர்வுக ளிலும் அனைத்துக் கலை ஆர்வலர்களையும் ஆய்வாளர் களையும் மாணவர்களையும் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைக்கிறார்கள். 30ஆம் மற்றும் 31ஆம் திகதி அமர்வுகளுக்கான முன்பதிவுகளை நுண்கலைத் துறையில் மேற்கோள்ளலாம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கலைப்பீடமும் இவ்வாண்டு தமது பொன்விழாவைக் கொண்டாடுகின்றன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இம்யூனோகுளோபுலின் மருந்துகள் இறக்குமதி: சட்டமா அதிபருக்கு அறிக்கை அனுப்பிவைப்பு

தரமற்ற இம்யூனோகுளோபுலின் மருந்துகள் இறக்குமதி செய்யப்பட்ட விவகாரம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்கு சட்ட ஆலோசனைகளை பெறும் நோக்கில் அந்த அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்கால நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பின்பற்றவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தரமற்ற இம்யுனோகுளோபுலின் மருந்து இறக்குமதி தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் மீள வாக்குமூலம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் உட்பட பல அதிகாரிகளின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ததைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.




சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என குற்றப் புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உள்ளிட்ட பலர் இந்த தரமற்ற இம்யுனோகுளோபுலின் தடுப்பூசி மருந்து விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

திருகோணமலையில் வாக்களிப்பின் முடிவில் வெற்றி வீரனாக அறிவிக்கப்பட்ட சிறீதரன் நேற்றுப் பிற்பகலிலேயே கிளிநொச்சி திரும்பியதும் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று மாவீரர்களின் நினைவுத்தூபிக்குக் கார்த்திகை மலர் வைத்துப் பூஜித்து, தமது தமிழ்த் தேசியப் பற்றைப் பறைசாற்றினார்.

நிச்சயமாக சுமந்திரன் இப்படிச் செய்திருக்கப் போவதில்லை. ஆகவே, தேசியத்துக்காக என்ற பெயரில் சிறீதரனுக்காகக் குரல் எழுப்பிய தரப்புகள் மகிழலாம். ஜென்ம சாபல்யம் கிடைத்ததாகவே கருதித் திருப்திப் படலாம்.

ஆனால் இந்தத் தேசியப் பற்று வெறும் நடிகர் திலகத்தின் படம் காட்டும் பிரசார விடயமாக முடிந்து விடக் கூடியது அல்ல. அது மட்டுமல்ல. இத்தகைய ஆரம்பத்தின் பிரதிபலிப்பு தெற்கிலும், சர்வதேச ராஜதந்திரத் தரப்புக்களிலும் காட்டப் போகும் எதிர்வினைகள் எவ்வளவு ஆழமானவையாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறீதரனுடன் ஒத்துழைத்து செயற்படுவோம் என்று சுமந்திரன் தனது தோல்வி படலத்தின் முடிவில் நேற்று அறிவித்தாலும் கூட, கள நிலைமை யாது என்பது எனக்கு நன்கு தெரியும்.

தலைமைகள் மாறும்போது கள யதார்த்தங்களும் மாறுவது தவிர்க்க முடியாதது.

சம்பந்தனினதும், மாவை சேனாதிராஜாவினதும் தலைமையின் கீழ் தாம் ஆற்றிய கட்சிப் பேச்சாளர் பணியை சுமந்திரன் நிச்சயம் முடித்துக் கொள்வார். அதை இனி தலைவர் சிறீதரன் தானே கையாள வேண்டும். அல்லது அவருக்காக உழைத்த யோகேஸ்வரன், அரியநேத்திரன் போன்றவர்களிடம் அவர் ஒப்படைக்கலாம். கட்சியின் சட்ட விவகாரங்களில் இருந்தும் சுமந்திரன் தொலைந்து போவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும். இவ்விடயத்தில் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களின் வாக்களிப்பு அவரின் உழைப்புக்கு கிடைத்த நன்றியறிதல் பரிசு அவ்வளவுதான். அதை – சட்ட விவகாரங்களை – இனிக் கையாள்வதற்குத்தான் தலைவர் சிறீதரன் கைவசம் இன்னொரு ஜனாதிபதி சட்டத்தரணியை வைத்திருக்கின்றாரே! ஆகவே கவலைப்படத் தேவையில்லை.

கட்சி தொடர்பான சர்வதேச விவகாரங்களின் கையாள்கையில் இருந்தும் சுமந்திரன் ஒதுங்கிக் கொள்வதும் தவிர்க்க முடியாததாக இருக்கும். ஆங்கிலத்தில் அதிகம் பரிச்சியம் இன்றியும் அதையும் சிறீதரனே கையாள வேண்டும். கையாள முடியும் என்பதை அவரே உறுதிப்பட தெரிவித்திருக்கின்றார்தானே..! ஏற்கனவே சிறீதரனின் வெற்றிக்காகத் தலைகீழாக உழைத்த புலம்பெயர் பின்னணி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி போன்ற தரப்புகளை இவ்விடயத்தில் சிறிதரன் நம்பியிருக்க வேண்டியதுதான்.

கட்சிக்காக அதிகம் ஓடித்திரிந்த சுமந்திரனுக்கும் ஒரு ரெஸ்ட் தேவைதான். சேர்ந்திருந்தே காலை வாரிய தரப்புகள் குறித்தும், கட்சியின் கீழ்மட்டத் தொண்டர்களின் நிலைப்பாடு குறித்தும் சிந்திக்கவும், தம்மை ஆசுவாசப்படுத்தவும், விட்ட சட்டத்துறை 'பிரக்டீஸை' சீர் செய்யவும் சற்று கால அவகாசம் எடுத்த பின்னர் நிச்சயம் அவர் பக்கத்தில் இருந்து ஒன்று இருக்கும்.

அது – மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

நிச்சயம் அது நடக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். அது உறுதியாக எனக்குத் தெரியும்.

அது எப்படி,எப்போது,என்ன வடிவத்தில் என்பதைக் காலம்தான் உரைக்கும்.

# மாத்தறையில் குறி தவறி இளைஞர் சுட்டுக்கொலை



மாத்தறை – தெலிஜ்ஜவில பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் கொலையாளிகளால் குறி வைக்கப்பட்ட நபர் அல்ல என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் தெனிபிட்டிய பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதான மின்திக அளுத்கமகே என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மாத்தறை தெலிஜ்ஜவில பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

திகாகொட–நாந்துகலஅணையின்சாய்வான பகுதியில் மோட்டார் சைக்கிள் விடப்பட்ட நிலையில் பொலிஸாரால் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன்போது மோட்டார் கைக்கிளின் இலக்கத் தகடு மற்றும் மின்கலம் அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் துப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடிய விதம் அருகில் இருந்த பாதுகாப்பு கமராவில் பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் கொலையாளிகளால் குறிவைக்கப்பட்ட நபர் அல்ல என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உயிரிழந்தவர் தனது தொலைபேசியை சார்ஜ் செய்ய கடைக்கு வந்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

குறித்த தொலைபேசி உபகரணக் கடையின் உரிமையாளரே அவர்களின் இலக்கு என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடந்தபோது கடையின் உரிமையாளர் கடையின் முன் நின்று கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட கடையின் உரிமையாளர் 2020ஆம் ஆண்டு கொள்ளையடித்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார் என்றும், அவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அடிப்படை உரிமை மனுவை வாபஸ் பெறுமாறு தமக்கு மிரட்டல் அழைப்புகள் வந்தன என்று கடையின் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## எம் மக்களின் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணைந்து வரக்கூடிய ஏனைய தரப்பினரையும் இணைத்துக்கொண்டு எங்களுடைய மக்களின் விடுதலைக்காக புதிய விடுதலை பாரம்பரியத்தை முன்னெடுக்கவுள்ளோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள சிவஞானம் சிறீதரன் எம்.பி. நேற்று திருகோணமலையில் தெரிவித்தார்.

"எங்களுடைய பங்கு – பணி என்பது இனம் சார்ந்தது, தமிழ்த் தேசியத்தினுடைய இருப்பு சார்ந்தது, எங்களுடைய இனத்துக்கான அடிப்படை உரிமைகள் சார்ந்தது. அந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒன்றிணைந்து பயணிப்போம்." – என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்னைத் தெரிவு செய்வதற்குக் காரணமாக இருந்த இயற்கை என்னும் இறைவனுக்கும், எனக்காக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அயராது உழைத்தவர்களுக்கும், மிகப் பெறுமதியான வாக்குகளால் என்னைத் தலைவராகத் தெரிவு செய்த பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகள்.

கட்சி தொடர்பில் இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதிக அக்கறையுடன் செயற்பட முன்வரும் நிலை உருவாகியுள்ளது.

என்னுடன் போட்டியிட்ட நண்பர்களான எம்.ஏ.சுமந்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோருடன் இணைந்து கட்சி செயற்பாட்டை இன்னும் பல வழிகளில், எமது மக்களின் உரிமைக்காக, தேசிய இருப்புக்காக, தேசியத்தின் ஒவ்வொரு அங்குலத்துக்காகவும் பொறுப்புடன் செயற்படுவோம்." – என்றார்.

## திருமலையில் யானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யானையின் தாக்குதலுக்கு இலக்காகிச் சாவடைந்துள்ளார்.

ஆயிலியடி பகுதியைச் சேர்ந்த எம்.எஸ். முகமட் யாகூப் (வயது 68) என்ற நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வான்எல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாவீரர்களுக்கு வணக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“ஈழத் தமிழர்களின் அரசியல் உரித்துக் கோரிய பயணத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக எனக்குரித்தாக் கப்பட்ட பொறுப்புக்களை உணர்ந்து, கொள்கை ரீதியில் ஒருமித்திருப்போரை ஒன்றிணைத்து மேற்கொள்ளவுள்ள பலம் மிக்க பயணத்தை கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து ஆரம்பிக்கின்றேன்” – வணக்க நிகழ்வின்போது சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

அதன்பின்னர் கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்கும் நிகழ்விலும், விசேட பூஜை வழிபாடுகளிலும் அவர் கலந்துகொண்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 74 வருட வரலாற்றில் முதல் முறையாக தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று திருகோணமலையில் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அமோக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார்.

சிறீதரனுக்கு ஆதரவாக 184 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கு ஆதரவாக 137 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அடுத்த வாரம் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் மாநாட்டின்போது, சிறிதரன் தலைவராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொள்வார்.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சமனற்ற நீதிக்குப் பரிகாரம்

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் கோடீஸ்வர வர்த்தகரான ராஜ் ராஜரட்ணத்தின் 'சமனற்ற நீதி' ஆங்கில நூலின் தமிழாக்கத்தின் வெளியீடு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தமக்கு எதிராக அமெரிக்க அரசுக் கட்டமைப்பு புரிந்த சமனற்ற நீதியை ஆட்சேபித்து உறுதியுடனும் துணிச்சலுடனும் நின்று, எதிர்கொண்டு போராடி, வெற்றி கொண்ட தமிழராக அவர் மெச்சப்படுகின்றார்; மதிக்கப்படுகின்றார்.

2009இல் இங்கு தமிழருக்கு எதிராக பெரும் யுத்தக் கொடூர அநீதி இழைக்கப்பட்டமை போல, அதே காலத்தில் கோடீஸ்வர வர்த்தகரான அவருக்கு எதிராகவும் அமெரிக்காவில் அவரின் வர்த்தகத்துறை ஊடாக இழைக்கப்பட்ட அநீதியை ஆட்சேபித்து, அவர் துணிச்சலுடன் மோதி, எதிர்கொண்டு மீண்டெழுந்துள்ளார்.

அவரின் அனுபவம் - பட்டறிவு - இன்று ஈழத் தமிழர்களுக்கு வழிகாட்டலாகவும் முன்மொழிவாகவும் பாதை வரைபடமாகவும் அமைந்திருக்கின்றமை கண்கூடு.

தமது புத்தக வெளியீட்டில் அவர் குறிப்பிட்ட சில விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

உங்கள் பக்கம் - உங்கள் நிலைப்பாடு - சரி என்றால் அதற்காகத் துணிச்சலுடன் போராடுங்கள். பின்னடிக்காதீர்கள். பின்வாங்காதீர்கள். அதுதான் வெற்றியின் இரகசியம் என்று அங்கு அவர் கூறிய விடயங்கள் முழு தமிழினமும் இன்று கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

தோல்வி அடைந்து விட்டோம் என்று நாம் துவண்டு விடத் தேவையில்லை. தமது வாழ்வையே பட்டறிவாக நம் முன் நிறுத்தி, நம் முன் இருக்கும் வழியில் நீதிக்காக நேர்மையுடன் போராடுவதே சரியான மார்க்கமாக இருக்கும், நாம் தளர்ந்து பின்னடைவு கொள்ளக்கூடாது என்று துணிச்சலூட்டும் அவரது வழிகாட்டல் இந்தச் சமயத்தில் தமிழ் சமூகத்திற்கு முக்கியமானது.

அவரது நூல்வெளியீட்டில்அவர்அதிகம்அரசியல் பேசவில்லை. ஆயினும் இரத்தினச் சுருக்கமாக அவர் அங்கு குறிப்பிட்ட கருத்துக்கள் தமிழர்களின் இன்றைய அரசியல் நிலைமை குறித்து ஒரு மறு மதிப்பீடு செய்து, புதிய பாதை ஒன்றை வகுத்துக் கொள்ள முக்கியமானதாக இருக்கின்றது எனக் கொள்ளலாம்.

இந்த செப்டம்பரில் நாட்டில் ஒரு தேர்தல் வருகின்றது. முன்னர் வந்த தேர்தல்களை விட இது வித்தியாசமானது. தமிழர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானது என்கிறார் ராஜ் ராஜரட்ணம். முன்னைய தேர்தல்களை போல, முதல் நாள் தரும் சோற்றுப் பார்சலுக்காகவும் சாராயப் போத்தலுக்காகவும் தென்னிலங்கை வாக்காளர்கள் இம்முறை வாக்களிக்கப் போவதில்லை என்று அவர் கூறுகின்றமை உண்மையே.

1956 இல் சிங்களம் மட்டுமே சட்டத்தின் மூலம் தமிழருக்கு அநீதி இழைக்கப்படும் வகையில் சமனற்ற நீதி பரிபாலிக்கப்பட்டதன் விளைவே நாட்டின் இன்றைய நிலைமை. வங்குரோத்து நிலைக்கு நாடு சென்றுள்ளது. தங்களது பிள்ளைகளுக்குப் பால் கொடுக்க முடியாமலும், தங்கள் உற்பத்திகளை சந்தைக்கு எடுத்துச் செல்ல வாகனங்களுக்கு எரிபொருள் இல்லாமலும், நாளுக்கு ஒரு நேரச் சாப்பாடு என்று பட்டினி நிலைக்குத் தம்மை சுருக்கி கொண்டமையை மக்கள் மறக்க மாட்டார்கள் என்று அவர் நினைவூட்டுகிறார்.

இந்தத் தேர்தலில் ஒரு கோடி 40 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க போகின்றார்கள். அவர்களில் முப்பது வீதத்தினர் தமிழர் மற்றும் முஸ்லிம்களாகிய சிறுபான்மையினர். இருபது வீதம் கடும் நிலைவாத சிங்களவர்கள். அவர்கள் ராஜபக்ஷவுக்கே வாக்களிப்பர். அதேசமயம், இந்தத் தேர்தலில் சிறுபான்மையினரே தீர்மானிக்கும் சக்திகளாக இருப்பர் என்று குறிப்பிடுகின்றார் ராஜி ராஜரட்ணம்.

எனவே இந்தத் தேர்தலில் தமிழர்கள் உட்பட சிறுபான்மையினருக்கு முக்கிய பொறுப்பு - கடப்பாடு - உண்டு. தங்களுக்கு இழைக்கப்பட்ட சமனற்ற நீதிக்கு பரிகாரம் தேடுவதற்கு இது நல்லதொரு வாய்ப்பு. ஒன்று - அவர்கள் ஐக்கியப்பட்டு ஒரு தீர்மானமாக எடுத்துச் செயல்பட வேண்டும்.

அடுத்தது - அந்தத் தீர்மானம் சரியானதாக, தந்திரோபாயமானதாக அமைய வேண்டும் என்று வழிகாட்டுகின்றார் அவர்.

இந்த சமயத்தில் நாம் ஒன்றுபட்டும், அதே வேளையில் சரியானதுமான தீர்மானத்தை எடுக்காவிட்டால் எமக்கு அறுபது ஆண்டுகளாக இழைக்கப்பட்டு வரும் சமனற்ற நீதிக்கு பரிகாரம் தேடும் அரிய வாய்ப்பை நாம் இழந்தவர்களாகி விடுவோம்.

அதேசமயம் அவர் சுட்டுவது போன்று எமக்குச் சரி என்று படுவதற்காக - நமக்கு நீதியானது என்று தோன்றுவதற்காக - சளைக்காது, மனம் சலியாது - பின்வாங்காமல் - நாம் போராட வேண்டும். இது காலம் நமக்குப் புகட்டிய பாடம் மாத்திரம் அல்ல, காலத்தின் கட்டாயமும் கூட.

# ராமர் கோயில் இன்று திறப்பு:

# தமிழகத்தில் வீடுகளில் தீபம் ஏற்றி வழிபடுமாறு ஆளுநர் ரவி அழைப்பு



"அயோத்தியில் பால ராமர் பிராண பிரதிஷ்டையுடன் இன்று தேசம் ஒரு அற்புதமான ராமர் கோயிலை பெறும். இந்த வரலாற்றுப் பொன்னாளை ஒவ்வொரு வீட்டின் முன்பும் தீபம் ஏற்றி ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடும். தமிழகத்தில் சகோதர, சகோதரிகள் அனைவரும் தங்கள் வீடுகள் மற்றும் குடியிருப்புகள் முன்பு தீபம் ஏற்றி இந்த நாளை கொண்டாடி வழிபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

– இவ்வாறு தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழ்நாடு ராஜ்பவன் எக்ஸ் தளப் பக்கத்தில் அவர் குறிப்பிடு கையில் ,

"நமது தேசம் இப்போதெல்லாம் ராம பக்தியில் மூழ்கியுள்ளது. நமது தமிழ்நாட்டு சகோதர, சகோதரிகள் மத்தியில் இதை நானே பார்த்து உணர்ந் திருக்கிறேன். "ஸ்ரீ ராமர்" பாரதத்தின் தேசிய அடையாளம். ஜனவரி 22 ஆம் திகதி அயோத்தியில் பால ராமர் பிராண பிரதிஷ்டையுடன் தேசம் ஒரு அற்புதமான ராமர் கோயிலை பெறும். இந்த வரலாற்றுப் பொன்னாளை ஒவ்வொரு வீட்டின் முன்பும் தீபம் ஏற்றி ஒட்டுமொத்த தேசமும் கொண்டாடும். தமிழகத்தில் சகோதர, சகோதரிகள் அனைவரும் தங்கள் வீடுகள் மற்றும் குடியிருப்புகள் முன்பு தீபம் ஏற்றி இந்நாளை கொண்டாடி வழிபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" – என்று அவர் பதிவிட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள பிரம்மாண்ட ராமர் கோயிலில் இன்று கும்பாபிஷேக விழா நடைபெறவுள்ளது. நண்பகல் 12.20 மணி அளவில் கோயில் கருவறையில் மூலவரான குழந்தை ராமர் சிலை வைக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் பங்கேற்க, இந்தியா முழுவதும் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள், சினிமா, விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த பிரபலங்கள் பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவில் பங்கேற்பேன்

## - நித்யானந்தாவின் பதிவால் சர்ச்சை



அயோத்தி நகரில் இன்று ராமர் கோயில் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ளப்போகிறேன் என தலைமறை வாக உள்ள நித்யானந்தா அறிவித்துள்ளார்.

இது தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

உத்தரப் பிரதேசம், அயோத்தியில் சுமார் 70 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டப்பட்டு உள்ளது. இந்த கோயிலின் திறப்பு விழா இன்று நடைபெறுகிறது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி, மடாதிபதிகள், அரசியல் தலைவர்கள், திரையுலகம், விளையாட்டு துறை பிரபலங்கள், வெளிநாட்டு தலைவர்கள் என 11 ஆயிரம் முக்கிய பிரமுக்கியர்கள் பங்கேற்க உள்ளனர்.

இந்த நிலையில், நித்யானந்தா தனது எக்ஸ் பக்கத்தில்,

"இந்த வரலாற்று மற்றும் அசாதாரண நிகழ்வைத் தவறவிடாதீர்கள். அயோத்தி கோயிலில் ராமர் பிரதிஷ்டை செய்யப்படுகிறார். இது உலகம் முழுவதையும் அலங்கரிக்கும் ஓர் நிகழ்வாகும். முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்து மதத்தின் உயர் மத தலைவர் (நித்தியானந்தாவை அவரது ஆதரவாளர்கள் இவ்வாறு அழைப்பார்கள் எனக் கூறப்படுகிறது) பகவான் ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் இந்த நிகழ்வில் கலந்துகொள்வார்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் தேடப்பட்டு வரும் குற்றவாளியான நித்யானந்தா கைலாசா என்ற தனி நாட்டை உருவாக்கியுள்ளேன் என அவரே கூறி வருகிறார்.

அத்துடன், பாலியல் வன்கொடுமை வழக்கில், 2010 ஆம் ஆண்டு அவரது ஓட்டுநர் கொடுத்த புகாரின் அடிப்படையில் நித்யானந்தாவை பொலிஸார் கைது செய்தனர்.

அதன்பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதைய டுத்து அவர் தலைமறைவாகிவிட்டார்.

# ராமர் கோயில் திறப்பு விழாவில் முக்கிய பிரமுகர்கள்

இன்று நடைபெறும் ராமர் கோயில் திறப்பு விழாவிற்காக பல முக்கிய பிரபலங்கள் அயோத்திக்கு சென்றுள்ளனர்.

நடிகர்களான ரஜினிகாந்த், தனுஷ், கங்கணா ரணாவத் என இந்தப் பட்டியல் நீள்கிறது.

இந்தப் பட்டியலில் ஆன்மீகவாதிகள், நடிகர், நடிகைகள், தொழிலதிபர்கள், மடாதிபதிகள் எனப் பலரும் இடம் பெற்றுள்ளனர். உத்தர பிரதேசத்தில் தொடரும் கடும் குளிர் மற்றும் பனியின் காரணமாக பெரும்பாலான அழைப்பாளர்கள் நேற்று அயோத்திக்கு சென்றுவிட்டனர்.

ஆன்மீகவாதிகளில், கர்நாடகாவிலிருந்து வாழும் கலை அமைப்பின் ஸ்ரீஸ்ரீரவிசங்கர், யோகாசான புகழ் பாபா ராம்தேவ், பாகேஷ்வர் மடத்தின் பீடாதீஷ்வரர் திரேந்தர் கிருஷ்ண சாஸ்திரி, பிரபலப் பக்தி பிரச்சாகரான மொராரி பாபு உள்ளிட்டோர் சென்றுள்ளனர்.

விவேக் ஓபராய், அனுபம் கெர், பவன் கல்யாண் உள்ளிட்டோரும் அயோத்திக்கு சென்றுள்ளனர்.

# மருத்துவ உதவிக்கு இந்திய விமானத்தை பயன்படுத்த மாலைதீவு ஜனாதிபதி மறுப்பு - சிறுவன் உயிரிழப்பு



மாலைதீவில் மருத்துவ சிகிச்சைக்கான பயணத்துக்காக இந்தியா வழங்கிய டோனியர் விமானத்தை பயன்படுத்த அந்த ஜனாதிபதி முகமது முய்சு அனுமதி மறுத்துள்ளார்.

இந்த நிலையில், அங்கு 14 வயது சிறுவன் ஒருவர் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உயிழந்த சிறுவன் மூளைக் கட்டி மற்றும் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு போராடி வந்துள்ளார். புதன்கிழமை இரவு சிறுவனுக்கு பக்கவாத பாதிப்பு தீவிரமடைந்தது.

இதனைத் தொடர்ந்து, அவர் வசித்து வந்த தூரத்து தீவான வில்மிங்டனில் இருந்து சிகிச்சைக்காக தலைநகர் மாலேவுக்கு அவரைக் கொண்டு செல்ல குடும்பத்தினர் தீர்மானித்தனர்.

இதற்காக அவர்கள் சிறுவனை விமானம்மூலம்கொண்டுசெல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் வியாழக்கிழமை காலை வரை அவர்களின் அழைப்புகளுக்கு எந்தவித மான பதிலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், 16 மணி நேர போராட்டங்களுக்குப் பின்னர் மாலைதீவு விமான போக்குவரத்து அதிகாரிகள் குடும்பத்தினரின் கோரிக்கைக்கு பதில் அளித்தனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தை உள்ளூர் ஊடகத்திடம் கூறுகையில், "பக்கவாத பாதிப்பு தீவிரமடைந்ததும் எனது மகனை உடனடியாக மாலேவுக்கு அழைத்துச் செல்வதற்காக நாங்கள் தீவின் விமான போக்குக்குவரத்து பிரிவுக்கு அழைத்தோம், ஆனால் அவர்கள் எங்களின் அழைப்புக்கு பதில் அளிக்கவில்லை. வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குதான் எங்களின் அழைப்புக்கு பதில் அளித்தனர். இதுபோன்ற பிரச்சினைகளுக்கு ஏர் அம்புலன்ஸ் இருப்பதே தீர்வு" என்றார்.

ஒருவழியாக அச்சிறுவன் மாலேவுக்கு கொண்டு செல்லப்பட்டு, உனடியாக அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டாலும், சிறுவன் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டதால் சிகிச்சை பலனளிக்கவில்லை.

இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையில் தூதரக உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவங்கள் நடந்துள்ளன.

கடந்த 2023 ஆம் ஆண்டு மாலைதீவில் நடந்த தேர்தலில் மக்கள் தேசிய காங்கிரஸ் தலைவர் முகமது முய்சு புதிய ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். சீன ஆதரவாளரான அவர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார் என நம்பப்படுகிறது.

நவம்பர் மாதம் ஜனாதிபதி மாளிகை வெளியிட்ட அறிக்கை ஒன்றில்,

"செப்டம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், இந்தியாவிடம் வலுவான கோரிக்கை வைக்க மக்கள் எனக்கு ஆணை பிறப்பித்துள்ளனர். மாலைதீவு மக்களின் ஜனநாயக விருப்பத்துக்கு இந்தியா மதிப்பளிக்கும் என்று நம்புகிறோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மாலைதீவில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்திய இராணுவ வீரர்களை மார்ச் 15 இற்குள் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார். புதிய ஜனாதிபதியின் சீன நெருக்கம் இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையிலான உறவில் விரிசலை உருவாக்கியுள்ளது.

இதனிடையே பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகவும், இந்தியாவுக்கு எதிராகவும் மாலைதீவு அமைச்சர்கள் 3 பேர் கருத்து தெரிவித்ததைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே இராஜாங்க ரீதியிலான உறவு மேலும் விரிசல் அடைந் துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# அமெரிக்காவில் பனிப்புயல்: 61 பேர் பலி



அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவுடன் பனிப்புயல் வீசி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பனிப்புயல் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக டென்னிசி, ஓரிகன் ஆகிய மாகாணங்களில் பனிப்புயல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவில் வீசி வரும் பனிப்புயலில் சிக்கி இதுவரை 61 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், பலர் பனிப்புயலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# மொட்டு - ஐ.தே.க. கூட்டு எங்களுக்கு சவால் அல்ல!

## சரத் பொன்சேகா கூறுகின்றார்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன. ஆனால் இவ்விரு கட்சிகளும் பலவீனமடைந்த நிலையிலேயே உள்ளன. எனவே இவை ஒருபோதும் எமக்கு சவாலான கட்சிகள் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது இதனை தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –


ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மக்களே காணப்பட வேண்டும். கடந்த காலங்களில் மக்களின் தவறான தீர்மானங்களால் தவறான தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் நாட்டை அழிவுப் பாதைக்கு கொண்டு சென்றனர். எனவே, இனிவரும் காலங்களில் மக்கள் சரியான தீர்மானத்தை எடுத்தால், நாம் அவர்களுடன் இருப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்கனவே கூட்டணி அமைத்துள்ளன. பொதுஜன பெரமுனவால் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரே தற்போதைய ஜனாதிபதியாக உள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி மிகவும் பலவீனமடைந்த நிலைமையிலேயே உள்ளது. எனவே இந்தக் கூட்டணி எமக்கு பாரிய சவாலாக அமையப்போவதில்லை.

மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப கட்சி முறையாக செயற்பட்டால் யார் யாருடன் கூட்டணி அமைத்தாலும் நாம் அச்சப்படத் தேவையில்லை. எமது நாட்டுக்கென கலாசாரமும் ஒழுக்கமும் காணப்படுகின்றன. அவற்றுக்கு ஏற்பவே செயற்பட வேண்டும்.

யுக்திய என்ற பெயரில் பதில் பொலிஸ்மா அதிபரால் நாடகம் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வாறு செயற்படுவதால் பாதாள உலகக் குழுவினரையும் கட்டுப்படுத்த முடியாது. போதைப் பொருளையும் அழிக்க முடியாது. – என்றார்.



# ஆனமடுவ் கால்வாயில் முதியவரின் சடலம் மீட்பு

புத்தளம் – ஆனமடுவ நகரிலுள்ள கால்வாயிலிருந்து நேற்று சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது

ஆனமடுவ நகரிலுள்ள கால்வாயிலில் சடலமொன்று காணப்படுவதாக பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வங்கியொன்றில் பாதுகாப்பு உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு பெற்ற 64 வயதான முதியவரொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்

சடலம் தொடர்பான விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# உலகளாவிய நிதிக் கட்டமைப்பை மறுசீரமைப்பது மிக அவசர தேவை

## உகண்டா உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ரணில் வலியுறுத்து

உலகளாவிய நிதிக் கட்டமைப்பை மறுசீரமைப்பது தற்போது அவசர தேவையாக உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

உகண்டாவின் கம்பாலா நகரில் நேற்று ஆரம்பமான ஜீ 77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென்துருவ உச்சி மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நவீன உலகளாவிய சர்வதேச கடன் தீர்வு மாதிரிகளில், பாரிஸ் கிளப் மற்றும் லண்டன் கிளப் என்பவற்றின் கடன் தீர்வு பொதிகள் தொடர்பான கொள்கை உலகிற்கு மிகவும் பொருத்தமானது.

தற்போது, உலகளாவிய கடன், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கடன், பாரிஸ் கிளப் மற்றும் சர்வதேச திறைசேரி முறிச் சந்தையில் உறுப்பினரல்லாத கடன் வழங்குநர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது.

தற்போதுள்ள நிதி வளங்களை, கடன் சேவையாக பெற்றுக்கொள்ளும் போது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அத்தியாவசியமான பொது சேவைகள் மற்றும் மனித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான தேவையான செலவுகளுக்கு நிதி வசதிகளை வழங்க முடியாமல் போகிறது.

எனவே, நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அது பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

கையிருப்பிலிருக்கும் நிதி வளங்களை கடன் சேவைகளாகப் பெற்றுக் கொள்ளும் போது பொதுத் தேவைகள், மனித அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்குத் தேவையான செலவுகளுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இதனால் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இந்த விடயம் தாக்கம் செலுத்துகிறது. தற்போது காணப்படும் பொது வரைவு விரைவில் கடன் தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு போதுமானதாக இல்லை. மேற்படி வரைவு மற்றும் நடைமுறையில் காணப்படும் பொருத்தமற்ற தன்மைகள் காரணமாக இலங்கை உள்ளடங்கலாக நமது நாடுகள் அனைத்தும் அரச கடன் நெருக்கடிகளை நிவர்த்திப்பதற்கான முயற்சிகளை தாமதிக்க வேண்டியுள்ளது.” – என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாரிய கூட்டணியாக, ஜீ77 காணப்படுகிறது.

உலகளாவிய தென் துருவ நாடுகள் தங்கள் கூட்டுப் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தவும் மேம்படுத்தவும், அத்துடன் ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்குள் சர்வதேச பொருளாதார பிரச்சினைகளை கூட்டாக விவாதிக்கவும் இடத்தை வழங்குகிறது.

இந்த நாடுகளுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பு உள்ளிட்டவை தொடர்பில், இந்த உச்சிமாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.

வர்த்தகம், முதலீடு, நிலையான அபிவிருத்தி, காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் அதன் 134 உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்தில் இந்த மாநாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# மட்டுவிலில் அதிகளவு ஹெரோயின் பயன்படுத்திய இளைஞர் உயிரிழப்பு



அதிகளவு ஹெரோயினை பயன்படுத்திய இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அந்த இளைஞர் கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் போதைப்பொருள் வழக்கு ஒன்றுடன் தொடர்புடையவர் என்ற ரீதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, கடந்த வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், அவர் நீர்வேலியில் உள்ள உறவினரது வீட்டில் 19ஆம் திகதி தங்கிவிட்டு, நேற்று முன்தினம் ஊருக்கு திரும்பியுள்ளார்.

அதனையடுத்து, நேற்று முன்தினம் இரவு அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக அவரது சகோதரனுக்கு தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது.

பிறகு, அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். அதன் பின்னரே இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், அவர் அதிகளவில் ஹெரோயின் பாவித்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இளைஞர் மரணம் தொடர்பில் உண்மைகளை கண்டறிய உடற்கூற்று பரிசோதனைகளை சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் மேற்கொண்டார்.



# 24 மணி நேரத்தில் 987 பேர் கைது


நாட்டில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 987 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடைய 663 சந்தேகநபர்களும், குற்றப்பிரிவின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த 324 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பில், 270 கிராம் ஹெரோயின், 140 கிராம் ஐஸ் மற்றும் 18 கிலோ கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



# உகண்டா ஜனாதிபதியுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு



உகண்டாவிற்கான உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனிக்கும் இடையில் உத்தியோக பூர்வ சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தனது அழைப்பையேற்று வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி நன்றி தெரிவித்துள்ளார்.

அத்துடன், சரிவடைந்திருந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தைப் பாராட்டியதோடு, அதற்காக நாட்டு மக்களின் பாராட்டும் கிட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் புதிய பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கை, பொருளாதார ரீதியில் முன்னோக்கி பயணிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை 2024 ஆம் ஆண்டின் புதிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

# தமிழரசின் புதிய தலைவர் சிறிதரன் யதார்த்தமாக செயற்பட வேண்டும்

## புளொட் தலைவர் சித்தார்த்தன் அறிவுரை



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவிற்கான தேர்தல் இடம்பெற்று முடிந்துள்ள நிலையில், எதிர்காலத்தில் அந்தக் கட்சி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்கு அவர் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நீண்ட கால பாரம்பரியம் கொண்ட, தமிழ் தேசியத்தின் ஆணிவேராக இருந்த கட்சியாகும். இதுவரையிலும், அந்த கட்சியின் தலைவராக பலர் செயற்பட்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதல் முறையாக தேர்தல் ஒன்றின் மூலம் தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைவர் பதவி தேர்தலுக்கான பிரச்சாரத்தின் போது மன முறிவுகள் ஏற்பட்டுள்ளன. இது தமிழ் தேசிய உணர்வுகளுக்கு சிறந்த ஒன்றாக தெரியவில்லை. தமிழரசுக் கட்சி ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்பது முக்கியமான ஒன்றாகும்.

கட்சிகளுக்குள்ளே காணப்படும் பிளவு ஒன்றுமையைக் கொண்டுவராது. எனவே புதிய தலைவர் யதார்த்தமான முறையில் செயற்பட வேண்டும். அனைத்து தரப்பினர்களையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டும்." என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# பாலஸ்தீன வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விற்கும் பாலஸ்தீன வெளிவிவகார மற்றும் புலம்பெயர்ந்தோர் தொடர்பான அமைச்சர் கலாநிதி ரியாட் மல்கிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

உகண்டாவின் கம்பாலா நகரில் நேற்று ஆரம்பமான 'ஜி 77 மற்றும் சீனா' 3 ஆவது தென் துருவ மாநாட்டுடன் இணைந்ததாக இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, காஸாப் பகுதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப் பட்டுள்ளது. இஸ்ரேல் – ஹமாஸ் மோதலில் பாலஸ்தீனத்தில் உள்ள அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்க முடியாது என்பதை தொடர்ந்து வலியுறுத்துகின்றோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

காஸா பகுதியில் மோதல்களைத் தடுத்து சமாதானத்தை நிலைநாட்ட ஐ.நா. செயலாளர் நாயகத்தின் வேலைத் திட்டத்திற்கு இலங்கை பூரண ஆதரவை வழங்கும் எனவும் ஜனாதிபதி தெரி வித்துள்ளார்.

05 வருடங்களுக்குள் பாலஸ்தீன அரசை ஸ்தாபிப்பதே இலங்கையின் முன்மொழிவாக இருக்கிறது எனவும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதையும், சுயாதீனமானதும், சுதந்திரமானதுமான உரிமைகளைப் பறிக்க முடியாது என்ற விடயத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்–டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள் ளார்.

# இவ்வாண்டு புதிய அரசுக்கான மாற்றத்தை ஏற்படுத்த முடியும்!

## அநுரகுமார திசாநாயக்க நம்பிக்கை



"தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்ற வேண்டும் என்ற மக்களின தும், தேசிய மக்கள் சக்தி கட்சியின தும் கொள்கை இன்று ஒன்றாக மாறியுள்ளதால், இந்த ஆண்டில் புதிய அரசாங்கத்துக்கான மாற றத்தை ஏற்படுத்த முடியும். அனைத்து வகையிலும் மூழ்கிக்கொண்டிருக் கும் நாட்டை காப்பாற்ற புதிய மறு மலர்ச்சி யுகம் காலத்தின் கட்டாயத் தேவை."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரி மகா நாயக்கரின் ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில் –

"தற்போதுள்ள ஆட்சி முறையை மாற்றுவது வெறும் அரசியல் வேலைத் திட்டம் அல்ல, தேசிய செயற்பாடு. புதிய மாற்றத்துக்காக மக்கள் தற்போது முன்வருகின்றனர்.

பொருளாதார ரீதியிலும் அனைத்து துறைகளிலும் நாட்டின் வீழ்ச்சிக்குக் காரணமானவர்கள் இன்று இருந்த இடத்தில் இருந்து ஒரு படி முன்னேறி நாட்டை கட்டியெழுப்பியுள்ளனர் என்று கூறுவது நகைப்புக்குரிய விடய மாகும்.

ஆகவே, இந்தப் பேரினவாதக் கும்பலிடம் இருந்து நாட்டை விடுவித்து, நாட்டைப் புதிய பாதைக்கு வழிநடத்த வேண்டும். இதுவே தேசிய மக்கள் சக்தி யின் இலக்காகும்.

மக்கள் வாக்குகள் தேசிய மக்கள் சக்தியிடம் இருப்பதை அறிந்த அரசாங் கம் தற்போது ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதா அல்லது பொதுத் தேர்தலை நடத்துவதா என்ற குழப் பத்தில் உள்ளது.

எந்தத் தேர்தலை முதலில் நடத்தி னாலும் அதனை எதிர்கொள்ள தேசிய மக்கள் சக்தி கட்சி தயாராக உள்ளது.

நாட்டில் மரக்கறிகளின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது. தேவைக்கு ஏற்றவாறு விநியோகம் இல்லாதபோது விலை அதிகரிப்பது சந்தைக் கோட்பாடு. இந்த சூழலில் இதனை அரசாங்கம் தலையிட்டு முகாமைத்துவம் செய்ய வேண்டும்." என்றார்.

# ஐ.நா. செயலாளர் நாயகத்தை சந்தித்தார் ஜனாதிபதி ரணில்




ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ்க்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு கம்பாலாவில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை வெற்றிகொள்வதற்கு சாதகமான சூழலையும் ஸ்திரத்தன்மையை உருவாக்குவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.




## வேலையின்மை வீதம் நாட்டில் அதிகரிப்பு

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் வேலையின்மை விகிதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வேலையின்மை விகிதம் 5.2 வீதமாக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில், இலங்கையில் வேலையின்மை விகிதம் 4.7 வீதமாக காணப்பட்ட நிலையில் இரண்டாவது காலாண்டில், 5.2 வீதமாக அதிகரித்துள்ளது.


கடந்த ஆண்டில் மாத்திரம் 15-24 வயதுடைய இளைஞர்களில் 25.8 சதவீதமானோர் வேலையை இழந்துள்ளனர் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மீண்டும் காற்றுச் சுழற்சி: அடுத்த வாரம் முதல் மழை

எதிர்வரும் சில நாள்களுக்கு நாட்டில் பெரும்பாலும் சீரான காலநிலையே தொடரும் என இலங்கை வளிமண்டவியல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அடுத்த வாரம் உருவாகும் காற்றுச் சுழற்சி காரணமாக எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மட்டக்களப்பு, பொத்துவில், திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகளிலும் எதிர்வரும் 28 ஆம் திகதியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் ஓரளவு மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

அதேநேரம் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் மழைக்கான சாத்திய கூறுகள் குறைவாகவே உள்ளன என வளிமண்டவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 22.01.2024




இன்றைய நாள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உற்சாகமும் கேளிக்கையும் நிறைந்திருக்கும். திரைப் படங்கள் பார்த்தல், பாடல்கள் கேட்டல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

நீங்கள் பணிகளை திட்டமிட்ட படி குறித்த நேரத்துக்குள் முடிப்பீர்கள். அதனால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

உங்களது இனிமையான வார்த்தைகளின் மூலம் உங்கள் துணையுடன் நல்ல புரிந்தணர்வை ஏற்படுத் திக்கொள்வீர்கள்.இதனால் இருவருக்கும் இடையிலான உறவில் திருப்தி கிடைக்கும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். அதை நீங்கள் ஆக்கப்பூர்வமான காரியத்திற்கு செலவு செய்வீர் கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. நெகிழ்வான அணுகுமுறை உங்க ளுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் அன்றாட நிகழ்வுகளில் தாமதங்கள் ஏற்படும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று கூடுதல் வேலைச் சுமைகள் காணப்படும். இதனால் கொடுக்கப்பட்ட பணிகளை குறித்த நேரத் துக்குள் செய்ய இயலாமல் போகும்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளதால் நீங்கள் பேசும் போது கவனமுடன் பேச வேண்டும். உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக வேலைப்பளு காரணமாக நீங்கள் இன்று தலை வலியால் பாதிக்கப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாளாக அமை யாது. இன்றைய நாளை திட்டமிட வேண்டும். இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிச்சுமை அதிகமாகக் காணப்பட லாம். கூடுதல் வேலைகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாமல் போகலாம்.

குடும்ப விஷயம் காரணமாக உங்கள் துணையுடன் சிறிய கருத்து மோதல்கள் காணப்படும். இதனால் தவறான புரிந்தணர்வு ஏற்பட நேரலாம் என்பதால் அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பணத்தை பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பீர்கள்.

இன்று கண்களில் எரிச்சல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று செயல்பாடு குறைவாக காணப்படும். இன்று உற்சாகம் மற்றும் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குழப்பமான மனநிலை காணப்படும். இன்று எடுக்கும் முக்கியமான முடிவுகள் தவறானதாக அமையும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக காணப்படலாம். உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்குள் முடிப்பதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடனான தகவல் தொடர்பாடலில் பிரச்சினைகள் ஏற்படும்.இது நல்லுறவை பாதிக்கும்.

நிதி வளர்ச்சிக்கு இன்றைய நாள் சாதகமாக இருக் காது. போதிய பணம் சேமிக்க நீங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீங்கள் தோல் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம்.




மிகுந்த முயற்சியின் மூலம் இன் றைய தினத்தை சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு நீங்கள் இன்று சரியாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். நீங்கள் கடமை உணர்வுடன் சுயநல மின்றி உங்கள் இலக்குகளை அடைய பணியாற்றுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விசேஷம் பற்றி உங்கள் துணையுடன் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். அதை நீங்கள் ஆக்கப்பூர்வமான காரியத்துக்கு செலவு செய் வீர்கள்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறப்பான நாள். இன்று நீங்கள் உங்களைச் சுற்றி இருக்கும் வேலைகளில் மிகவும் மும்மரமாக காணப்படுவீர்கள். உங்கள் முயற்சி களில் நற்பலன்களைப் பெற நீங்கள் இன்று புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும்.

உங்கள் செயல்பாட்டின் மூலம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிப்படும்.அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்கள் பணிகளை ஆற்றுவதற்கு இது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக உணர்வு களை பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல புரிந்தணர்வை ஏற்படுத்திக்கொள்ள உதவும்.

இன்று உங்கள் பொறுப்புகளை எதிர்கொள்ளும் அளவிற்கு உங்களிடம் பணம் காணப்படும்.




இன்று அதிகமான செயற்பாடுகள் காணப்படாது. இன்று உங்கள் நிலையில் கட்டுப்பாட்டை இழந்து காணப்படுவீர் கள். இன்று நற்பலன்களைக் காண பொறுமை மிகவும்அவசியம். மனக் குழப்பங்களுக்கு ஆளாகாதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறமையுடன் ஆற்றுவதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.

உங்கள் நம்பிக்கையான மனப்போக்கின் காரண மாக உங்கள் துணையுடன் நல்லுறவைப் பேணுவீர்கள். உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியும் திரு- ப்தியும் நிலவும்.

போதுமான பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புக் குறைவு. இதனால் சேமிப்பு குறையும். இன்று அதிர்ஷ் டம் குறைவான நாள்.




இன்றைய தினம் நற்பலன்களை அளிக்கும் வகையில் சாதகமாக அமை யாது. பலன்கள் மெதுவாகக் கிடைக்கும். இன்றைய தினம் அதிகமாக எதிர்பார்க் காதீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வ தன் மூலம் வெற்றி காணலாம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்க ளுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை இன்று திட்டமிட்டு செய்ய வேண்டியது அவசியம்.

இன்று இறுக்கமான மனநிலையுடன் காணப்படு வீர்கள்.இதை உங்கள் துணையிடம்வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்துவது நல்லது.

இன்று விலைமதிப்பு மிக்க பொருள்களைப் பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள். அவற்றை இழப்பதற்கான சாத்தியம் உள்ளது. பணஇழப்புக்கான வாய்ப்பும் உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 22.01.2024




இன்று சிறப்பான நாளாக காணப் படும். உங்கள் இலட்சியங்களில் தன்னம் பிக்கையுடன் முன்னேறுவீர்கள். உங்கள் நண்பர்கள் மற்றும் நெருங்கிய கூட் டாளிகளிடம் நல்லுறவை பராமரிப்பீர் கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு இன்று உங்களுக்குக் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இன்று மகிழ்ச்சியான நாளாக இருக்கும். உங்கள் துணையுடன் நட்பு முறையில் பழகுவீர்கள்.

இன்று பணவரவு சிறப்பாக காணப்படும். இன்று அதிர்ஷ்டமான நாள். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். அந்த நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மன அழுத்தம் காரணமாக அசௌகரியங்கள் காணப்படும். மன அழுத்தத்தைக் குறைக்க இசையை கேளுங்கள் அல்லது திரைப்படங்களைப் பாருங்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சி யைத் தரும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இன்று திட்டமிட்டு அதன்படி வேலை செய்வதன் மூலம் வளர்ச்சி காணலாம்.

உங்கள் துணையுடன் சில சச்சரவுகள் காணப்படும். கருத்து வேறுபாடுகள் காணப்படும். இதனால் மனம் தளர்ந்து காணப்படுவீர்கள்.

இன்று பணஇழப்புக்கான வாய்ப்பு உள்ளது. இன்று தேவையில்லாத செலவுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் பொழுது இறுக்கமாக உணர்வீர்கள்.




இன்று சாதாகமான நாளாக இருப் பதைக் காண்பீர்கள். உங்கள் புத்திசா லித்தனத்தின் மூலம் இன்று நிறைய சாதிப்பீர்கள். இன்று உங்கள் வளர்ச் சிக்கு உதவும் புதுமையான கருத் துக்களை கொண்டிருப்பீர்கள். அதற்கு முயற்சி எடுப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் தரமான பணிகள் மேலதிகாரி களின் நன்மதிப்பைப் பெறும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியைத் தக்க வைத் துக் கொள்வீர்கள். இன்று சுமுகமான சூழ்நிலையும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். ஆன்மீக் காரியங்கள் உங்களுக்கு ஆறுதலைத் தரும்.




இன்று வளர்ச்சியில் தடைகள் காணப்படும். நீங்கள் சவால்களைத் தாண்டி சமாளிப்பீர்கள். இது உங்களுக் குத் திருப்தியை அளிக்கும். சில சமயங்களில் பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் லட்சியங்களை அடைவதில் தாமதங்கள் ஏற்படும்.

உங்கள் பணியில் தடைகள் காணப்படும். இன்று பணிச்சுமை இருப்பதனால் சற்று பின்தங்கிய நிலை காணப்படும். அதிர்ஷ்டத்தை நம்புவதை விட கடின உழைப்பை நம்புங்கள்.

உங்கள் துணையுடனான உறவில் அதிருப்தி நிலவும். தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இன்று கூடுதல் பொறுப்பு காரணமாக அதிக செலவினங்கள் காணப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான சிறீதரன் சந்திக்கப் போகும் சவால்கள்

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறீதரன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

வெற்றி வாய்ப்பை இழந்த சுமந்திரன் கட்சி செயற்பாடுகளில் சிறிதரனுக்குப் பக்க பலமாக செயற்படுவார் என நம்புகிறேன்.

இதேவேளை வடக்கில் தனிப்பெரும் கட்சியும் 75 வருட வரலாற்றைக் கொண்டதுமான தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிறிதரன் சில விடயங்களில் மிக அவதானமாக செயற்பட வேண்டும். அவரின் முன்னே பல சவால்கள் காத்திருக்கின்றன. அந்த சவால்களை வெற்றி கொள்ளாவிட்டால் தமிழரசுக்கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி அழிந்து போய்விடும்.

முதலாவது ஏற்கனவே தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்திருந்த ஒட்டுக்குழுக்கள் ஒற்றுமை என்ற பெயரில் மீண்டும் வந்து சேர்வதற்கு முயற்சிப் பார்கள். அப்படி அந்த ஒட்டுக்குழுக்களுடன் சேர்ந்து தேர்தல் நடவடிக்கையில் கூட்டாக செயற்பட்டால் தமிழரசுக்கட்சி அழிந்து போய்விடும்.

தமிழரசுக்கட்சியின் ஆதரவுத்தளம் குறைந் ததற்கு முக்கிய காரணம் ஒட்டுக்குழுக்களை சேர்த்ததுதான்.

2009 வரை சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்திருந்து தமிழ் மக்களை அழித்த புளொட் இயக்கத்தை 2013ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் சேர்த்ததால் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் பலரை புளொட் இயக்கம் தன்னுடன் சேர்த்துக்கொண்டது. இப்போது அவர்கள் புளொட் இயக்கத்தின் முக்கிய அரசியல் செயற்பாட் டாளர்களாக உள்ளனர்.

உதாரணமாக இலங்கை தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட இளைஞர் அணிச் செயலாளரான தர்சானந்தன் யாழ். மாநகர சபை தேர்தலில் புளொட் இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட வட்டாரத் திலேயே போட்டியிட்டார். அதன் பின் அவரை புளொட் இயக்கம் முழுமையாக உள்வாங்கிக் கொண்டது. இப்போது அவர் புளொட் இயக்கத்தின் தீவிர செயற்பாட்டாளர். அது போன்று வடமாகாண சபை தேர்தலிலும் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் சிலரை புளொட் இயக்கம் வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக்கொண்டது. அவர்கள் இப்போது புளொட் இயக்க உறுப்பினர்களாக மாறிவிட்டனர்.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு பிரதேச சபைகளை தமிழ் தேசியக் கூட்ட மைப்பு ரெலோவுக்கு தாரை வார்த்ததால் தமி ழரசுக்கட்சி உறுப்பினர்கள் பலர் ரெலோவின் உறுப்பினர்களாகஇன்றுமாறிவிட்டனர்.மட்டக்களப்பு மாநகரசபையில் கல்லடி வேலூர் வட்டாரம் ரெலோவுக்கு ஒதுக்கப்பட்டது. அதில் தமிழரசுக் கட்சி ஆதரவாளரான ஜெயா நிறுத்தப்பட்டார். இப் போது ஜெயாவை ரெலோ முழுமையாக தங்களுக் குள் உள்வாங்கி கொண்டது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட போது ரெலோவின் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறாமல் தமிழரசுக்கட்சி வேட்பாளராக நிற் பதற்கு சம்மதித்தால் ரெலோ சுட்டு விடுவார்கள் என ஜெயாவின் குடும்பத்தினர் கூறியதை நான் அறிவேன்.

இப்படி ஒட்டுக்குழுக்களை தமிழரசுக்கட்சி



தொடர்ச்சி ▼

# தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான சிறீதரன் சந்திக்கப் போகும் சவால்கள்

தொடர்ச்சி ▲

தன்னுடன் சேர்த்து வைத்திருந்ததால் மிகப் பெரிய பாதிப்பை தமிழரசுக்கட்சி சந்தித்தது.

தமிழரசுக்கட்சி தலைவராக தெரிவாகியிருக்கும் சிறிதரன் கடந்த காலப் படிப்பினைகளைக் கருத்தில் கொண்டு ஒட்டுக்குழுக்களை வாசல் படிக்கும் எடுக்காமல் இருக்க வேண்டும். ஒற்றுமை என்ற பெயரில் தமிழரசுக்கட்சியுடன் சேர்ந்து அரசியல் செய்ய வரும் ஒட்டுக்குழுக்களை தன்னுடன் சேர்ப்பாராக இருந்தால் தமிழரசுக்கட்சி முற்றாக அழிந்து விடும்.

சிறிலங்கா புலனாய்வு பிரிவுடன் சேர்ந்து இயங்கி கொண்டிருக்கும் வெளிநாடுகளில் உள்ள சருகுப்புலிகளின் கைப்பொம்மையாக சிறிதரன் செயற்பாடுவாரானால் தமிழரசுக்கட்சி அழிவை நோக்கியே செல்லும்.

வெளிநாடுகளில் உள்ள நெடியவன் தலைமையிலான புலிகள் என சொல்லிக்கொள்பவர்களை இயக்குவது சிறிலங்கா புலனாய்வு பிரிவுடன் தற்போது கொழும்பில் இருக்கும் நந்தகோபன். சிறிலங்கா புலனாய்வு பிரிவின் நோக்கம் தமிழ் மக்களுக்கு பலமான அரசியல் தலைமை இருக்க கூடாது என்பதாகும்.

எனவே சிறிலங்கா புலனாய்வு பிரிவின் கட்டளையின் கீழ் இயங்கும் நெடியவன் தலைமையிலான குழுவின் கைப்பொம்மையாக சிறிதரன் செயற்பட்டால் தமிழரசுகூக்கட்சி முற்றாக அழிவதை தடுக்க முடியாமல் போய் விடும்.

வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக சிறிதரன் காட்ட முற்பட்டால் விடுதலைப் புலிகளை இன்னமும் தடை செய்து வைத்திருக்கும் மேற்குலக நாடுகளிடமிருந்து தமிழரசுக்கட்சி அந்நியப்பட வேண்டி வரும். இந்த இராசதந்திரத்தை சிறிதரன் சரியாக புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

ஈழத்தமிழர்களின் தனிப்பெரும் கட்சியான தமிழரசுக்கட்சி இந்த விடயங்களை கருத்தில் கொண்டு செயற்படாவிட்டால் அழிந்து போவதைத் தவிர்க்க முடியாது.

தமிழரசுக்கட்சிக்கான போட்டி அறிவிக்கப்பட்ட பின்னர் சிலர் மிகக்கேவலமான பிரசாரங்களை செய்தனர். இவர்களை இனிக் கட்டுப்படுத்த வில்லை என்றால் எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுவதை தடுக்க முடியாமல் இருக்கும். இந்தத் தீய சக்திகள் யார் என்பதை சிறிதரன் என்னிடம் நேரில் கேட்டால் அந்த விவரங்களை அவருக்கு நான் சொல்வேன்.

இதுவரை காலமும் கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளில் அக்கறை காட்டவில்லை என்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகளை அவர் கண்டு கொள்ளவில்லை என்றும் அம்மக்கள் நடத்தும் போராட்டங்களில் பங்கு பற்றவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

யாழ். குடாநாட்டிற்கு இரணைமடு குளத்தில் இருந்து தண்ணீர் கொடுப்பதை தடுத்தார் என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இனிமேல் இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

சிறிதரன் இந்தச் சவால்களை வெற்றி கொண்டு தமிழரசுக்கட்சியை தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக தக்க வைத்துக்கொள்வாரா? அவரின் முன் கடினமான சவால்கள் காத்திருக்கின்றன.

எனினும் சிறிதரன் இந்த சவால்களை வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கையோடு அவருக்கு மீண்டும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**இரா. துரைரத்தினம்,**
**ஊடகவியலாளர்.**

